**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

முன்னிலை : திரு. **பூ. ஜேசுபாலன்** , M.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான்.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ஆம் நாள் வியாழக்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 50/2022**

**CNR No. TNTV09-000093-2022**

| Sl.No. | Description | Remarks |
|---|---|---|
| 1) | The period of remand of the accused | Remanded on : Nil<br>Released on : 27.09.2022 |
| 2) | The date of filing of complaint/final report in the Court | 12.07.2022 |
| 3) | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable |
| 4) | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of theCode of Criminal producer 1973 asthe case may be | 18.10.2022 |
| 5) | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court.Except routinepetitions like petition under section317 of the Code . | Nil |
| 6) | Date of examination in Chief and Cross examination of a witness | PW1 – 09.10.2023 -<br>PW1 - Cross 16.10.2023, 28.12.2023<br>DW1–26.09.2025, 03.10.2025<br>DW1 – Cross -03.10.2025<br>DW2 – 10.10.2025<br>DW2-cross 10.10.2025, 24.11.2025<br>DW3- 05.03.2026<br>DW3- Cross 05.03.2026 |
| 7) | Date of examination of the accused under section 313 of the Court | 12.08.2024 |
| 8) | Details of Abscondence of an accused and his appearance | Not Applicable |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:32:28 +0530

| | | |
|---|---|---|
| | /Production, as the case may be | |
| 9) | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable |

**B. மதனகோபால், வயது 67/2026**
த/பெ. பாஸ்டின்
க.எண். 2–272/2 மாதாகோவில் தெரு,
செம்மங்குடி
வலங்கைமான் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

... புகார்தாரர்

**/ எதிர்/**

**சதீஷ்குமார், வயது 42/2026**,
த/பெ. கோதண்டராமன்
க.எண். 5/23A
வெட்டாற்று பாலம்
வலங்கைமான் தாலுக்கா
திருவாரூர் மாவட்டம்

... எதிரி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 12.07.2022 அன்று இந்நீதிமன்றத்தில் சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.50/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதுமுதல் இந்நீதிமன்றத்தின் பரிசீலினையிலிருந்து வந்து கடந்த 26.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. B. மகேஷ்வரன் பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.கம்பன், பி.ஏ.,பி.எல்., மற்றும் அறிவழகன்,பி.எஸ்சி.,பி.எல்., ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், சாட்சியங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்தும் இன்று (16.04.2026 )இந்நீதிமன்றம் வழங்கும்...

**// தீர்ப்புரை//**

1. புகார்தாரர், எதிரி மீது மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138, 142 ன்கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:32:36 +0530

**2. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள புகார்மனுவின் சுருக்கம்:-**

**2.1)** புகார்தாரரும் எதிரிகள் குடும்ப நண்பர்கள் ஆவார்கள் என்றும், புகார்தாரர் கடந்த 15.02.2022 ல் நேரில் அணுகி அவசர குடும்ப செலவிற்காக ரூ.3,65,000/- -த்தை கடனுதவி கேட்டுள்ளார் என்றும், புகார்தாரர் அன்றைய தினமே எதிரியிடம் ரூ. 3,65,000 த்தை கடனாக கொடுத்துள்ளார் என்றும், மேலும் கடன்தொகை ரூ.3,65,000/-த்தை புகார்தாரரிடமிருந்து எதிரி பெற்றுக்கொண்டு கடந்த 31.03.2022 ம் தேதியிட்டு எதிரி கணக்கு வைத்துள்ள நீடாமங்கலம் பாரத ஸ்டேட் வங்கி கிளையின் காசோலை எண். 431925 என்ற எண் கொண்ட காசோலையை ரூ.3,65,000/- தொகையை பூர்த்தி செய்து கையொப்பமிட்டு புகார்தாரரிடம் கொடுத்து 31.03.2022 ம் தேதியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தால் தொகை ரூ.3,65,000/-த்தை புகார்தாரர் பெற்றுக்கொள்ளலாம் என்று நம்பிக்கையுடன் கூறியுள்ளார் என்றும், புகார்தாரர் கடந்த 31.03.2022 அன்று புகார்தாரர் கணக்கு வைத்துள்ள பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளையில் வசூலுக்காக சமர்பித்துள்ளார் என்றும், மேற்படி காசோலையை பெற்ற பாரத ஸ்டேட் வங்கி, வலங்கைமான் கிளையில் காசோலைக்கு போதிய பணமில்லை (Funds Insufficient) என்று தெரிவித்து திருப்புதல் குறிப்பணை கடந்த 31.03.2022 ல் புகார்தாரருக்கு வழங்கியுள்ளது என்றும், எதிரி அவரது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று நன்கு அறிந்திருந்தும் புகார்தாரருக்கு காசோலை வழங்கி அவற்றை வங்கி மூலம் வசூலுக்கு சமர்பித்து பணம் பெற்றுக்கொள்ளுமாறு கூறி அதன் மூலம் புகார்தாரரை நம்ப வைத்து ஏமாற்றி மோசடி செய்யும் நோக்கத்தோடு எதிரி செயல்பட்டுள்ளார் என்றும், எதிரி கொடுத்த காசோலை பணமாகாமல் போதிய பணமில்லை என்று திருப்பபட்ட விபரம்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:32:45 +0530

தெரிவித்து தன்னுடைய வழக்கறிஞர் மூலம் கடந்த 13.04.2022 அன்று அறிவிப்பு எதிரிக்கு அனுப்பியுள்ளார் என்றும், அந்த அறிவிப்பில் மேற்படி காசோலையில் கண்ட கடன் தொகையை அறிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 15 தினங்களுக்கு திரும்ப செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேற்படி புகார்தாரர் அறிவிப்பை கடந்த 30.04.2022 அன்று பெற்றுக்கொண்ட எதிரியானவர் காசோலையில் கண்ட கடன் தொகையை திரும்ப செலுத்தாமல் பொய்யான காரணங்களை கொண்டும் பொய்யான தகவல்களை தெரிவித்தும் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், எனவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 138 மற்றும் 142–ன் படி குற்றம் என்றும் எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் படி தண்டித்தும் குற்றமுறையீட்டாளருக்கு கு.வி.மு.ச பிரிவு 357 ன் படி இழப்பீடு தொகை தரவேண்டும் என்றும் கோரி இந்த புகாரினை தாக்கல் செய்துள்ளார்.

**3.** புகார்தாரரின் உறுதிமொழி ஆணையுறுதி ஆவணம் பிரிவு 200 கு.வி.மு.ச –ன் படி பதிவு செய்யப்பட்டு வழக்காவணங்கள் மற்றும் ஆணையுறுதி ஆவணம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, எதிரி மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138 ன்கீழ் குற்றம் இழைத்தாக முகாந்திரம் இருக்கின்ற காரணத்தினால், இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரி முன்னிலையானவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு, போதியகால அவகாசம் வழங்கிய பின்னர், எதிரி மீதான மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றம் பற்றி வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துள்ளார். ஆகவே

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:32:53 +0530

புகார்தாரர் தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**4.** புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் மதனகோபால் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5. புகார்தாரர் தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:–</u>

**5.1.** புகார்தாரர் தரப்பில் தனது வழக்கை நிரூபணம் செய்வதற்காக புகார்தாரர் மதனகோபால் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். புகார்தாரர் தரப்பில் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பு.சா.1 மதனகோபால் அவரது சாட்சியத்தில் தானும் இவ்வழக்கின் எதிரியும் குடும்ப நாண்பர்கள் என்றும். இவ்வழக்கின் எதிரியானவர் கடந்த 15.02.2022–ல் அவரது குடும்ப அவசர செலவிற்காக தன்னிடம் ரூ.3,65,000/–( ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தைந்தாயிரம்) மட்டும் கடனுதவி கேட்டதாகவும் தானும் அன்றைய தினமே மேற்படி தொகையை கடனாக கொடுத்ததாகவும், மேற்படி கடன் தொகையை மேற்படி தேதியில் பெற்றுக்கொண்ட எதிரி கடந்த 31.03.2022ம் தேதியிட்டு அவர் கணக்கு வைத்துள்ள நீடாமங்கலம் பாரத ஸ்டேட் வங்கி கிளையின் (காசோலை எண் 431925) என்ற எண் கொண்ட காசோலையை பூர்த்தி செய்து கையொப்பமிட்டு தன்னிடம் கொடுத்து கடந்த 31.03.2022 தேதியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தால் மேற்படி தொகையை பெற்றுக்கொள்ளலாம் என்று நம்பிக்கையுடன் கூறியதாகவும், அதன்படி தான் கடந்த 31.03.2022 அன்று தான் கணக்கு வைத்துள்ள பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:33:00 +0530

எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) என்ற குறிப்புடன் திருப்பபட்ட விவரத்தை தான் வங்கி மெமோ மூலம் தெரிந்து கொண்டு, கடந்த 13.04.2022 அன்று தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் திரும்ப செலுத்தி மேற்படி காசோலையை திரும்ப பெற்றுக்கொள்ளுமாறும் தவறும் பட்டசத்தில் போதிய பணமில்லாமல் வேண்டுமென்றே தனக்கு பொய்யான காசோலை கொடுத்து தன்னை நம்ப வைத்து மோசடி செய்த குற்றத்திற்காக எதிரி மீது வழக்கு தொடுக்க நேரிடும் என்று தெரிவித்ததாகவும், எதிரி கடந்த 30.04.2022 அன்று பெற்றுக்கொண்டு கடன் தொகையை திரும்ப செலுத்தாமல் பொய்யான காரணங்களை கொண்டும் பொய்யான தகவல்களை தெரிவித்தும் வழக்கறிஞர் மூலம் தனக்கு பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும் எதிரி சட்ட ரீதியாகவும், ஆவணங்கள் ரீதியாகவும் நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார் என்று கூறி எதிரி காசோலையில் குறிப்பிட்டுள்ள கடன் தொகையை திரும்ப செலுத்தாததால் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 மற்றும் 142 ன்கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்றும், மேலும் தான் புகார் மனுவுடன் தாக்கல் செய்துள்ள கடந்த 31.03.2022 ம் தேதியிட்ட எதிரி கொடுத்த காசோலை எண்.431925 அசல் பு.சா.ஆ 1 ஆகும் என்றும். கடந்த 31.03.2022 ம் தேதியிட்ட பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளையில் வழங்கிய Return Memo Report அசல் பு.சா.ஆ.2 ஆகும் என்றும், கடந்த 13.04.2022 ம் தேதியிட்ட தனது வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பு.சா.ஆ.3 ஆகும் என்றும், கடந்த 30.04.2022 ம் தேதியிட்ட எதிரி பெற்றுக்கொண்ட அறிவிப்பின் அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் பு.சா ஆ 4 ஆகும் என்றும், ஆதார்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:33:08 +0530

அட்டை நகல் பு.சா.ஆ.5 ஆகும் என்றும், கடந்த 26.04.2022 ம் தேதியிட்ட எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு பு.சா.ஆ.6 ஆகும் என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். அதன்பின்பு எதிரி எந்தவிதமான பதிலும் தெரிவிக்காமல், காசோலைத் தொகையை திருப்பித்தராமலும் இருந்து வருவதால், புகார்தாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், புகாரில் கோரியுள்ளவாறு, எதிரியை தண்டித்து, இழப்பீட்டு தொகை செலுத்த உத்தரவிடவேண்டுமென சாட்சியமளித்துள்ளார்.

**6.** வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சிகளை தொடுத்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1)(b) வினவிய போது சாட்சிகளை மறுத்து " பொய் வழக்கு " என்று கூறி வழக்கை மறுத்து எதிரி தரப்பில் எதிரித்தரப்பு சாட்சியாக மூன்று சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

**7.** எதிரி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக எ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நீடாமங்கலம் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா மேலாளர் திரு.வெங்கடேஷ் தனது சாட்சியத்தில் தான் மேற்படி முகவரியில் வசித்து ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா நீடாமங்களம் கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் தங்கள் கிளையில் கணக்கு வைத்துள்ள சதீஷ்குமார் என்பவரின் 01.01.2019– தேதியிலிருந்து 01.01.2023 தேதி வரையிலான வங்கி பணப்பரிவர்த்தனையின் விபரங்களை தாக்கல் செய்கிறேன் என்றும், கடந்த 31.03.2022 அன்று காசோலை திருப்பப்பட்டதற்கான விபரங்கள் இந்த கணக்குபட்டியலில் இல்லை என்றால் சரிதான் என்றும், மேற்படி காசோலையில் கண்ட தொகை இல்லை என்று

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:33:16 +0530

திருப்பப்பட்டால் திருப்பப்பட்டதற்கான விபரங்கள் குறிப்பிடப்படாது என்றும், காசோலை திருப்பப்பட்டதற்கான பணப்பரிவர்த்தனையில் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், அடுத்த வாய்தா தேதியில் மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்று சாட்சியம் அளித்து பின்னர் வேறொரு தினத்தில் தனது முதல் விசாரணை தொடர்ச்சியாக, தான் காசோலை எண்.431925 திருப்பப்பட்டதற்கான ஆவணங்களை கொண்டு வந்தேன் என்றும், காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள All our stamps cancelled என்ற வாசகத்திற்கு அன்றைய தின பரிவர்த்தனை முடிவுற்றதை குறிப்பதற்கான குறியீடு தான் மேற்படி வாசகம் என்றும், அதன் பிறகு மேற்படி காசோலையை 6 மாதத்திற்குள் எப்போது வேண்டுமானாலும் திரும்ப சமர்பிக்கலாம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** எதிரி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக எ.ம.சா.2 ஆக இவ்வழக்கின் எதிரி சதீஷ்குமார் விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.2 தனது முதல் விசாரணையில் தனது ஊரை சேர்ந்த ரமேஷ் த/பெ சண்முகம், சின்னையன் த/பெ கருப்பன் என்பவர்களின் மூலமாக இவ்வழக்கின் புகார்தாரரை தனக்கு தெரியும் என்றும், கடந்த 10.01.2019 ம் தேதி நான் புகார்தாரரிடமிருந்து ரூபாய் 3 லட்சம் கடனாக மாதம் 5 பைசா வட்டி வீதம் வாங்கியதாகவும், மேலும் சில்லரையாக ரூபாய் 65,000/– புகார்தாரரிடமிருந்து வேறுவேறு தினங்களில் கடனாக மாதம் 5 பைசா வட்டிக்கு பெற்றேன் என்றும், மேற்படி தொகையான ரூ.3,65,000/–க்கு மாதம் ரூ.18,250/– புகார்தாரரிடம் செலுத்தி வந்தேன் என்றும், தான் 10.01.2019 ம் தேதி முதல் 31.12.2019 ம் தேதிவரை மேற்படி தொகைக்கு தான் மேலே குறிப்பிட்ட தனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னையன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:33:23 +0530

முன்பு வைத்து வட்டி செலுத்தி வந்தேன் என்றும், அதன் பின்பு 01.01.2020 முதல் அக்டோபர் 2020 வரை தான் மேற்படி தொகைக்கு புகார்தாரருக்கு வட்டி செலுத்தவில்லை என்றும், கடந்த 18.10.2020 அன்று தனக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை தனக்கு வந்ததால் மேற்படி தொகையிலிருந்து ரூ.2,25,000/– ஐ தான் தனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னைய்யன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள் முன்பு வைத்து புகார்தாரரிடம் அசலில் வரவு வைத்துக்கொள்ளுமாறு கொடுத்தேன் என்றும், தான் கடந்த 28.12.2020 ம் தேதியன்று ரூ.31,500/–ஐ மேற்படி தொகைக்கு வட்டியாக தனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னைய்யன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், அதன்பிறகு புகார்தாரர் தன்னிடம் மேற்படி தொகையை வட்டி பாக்கி ரூ.5,000/– இருப்பதாக கூறி தன்னிடம் தொடர்ந்து கேட்டு வந்தபடியால் தான் ரூ.5,000/– ஐ கடந்த 05.05.2021 அன்று புகார்தாரரிடம் மேற்படி தனது ஊரை சேர்ந்த ரமேஷ், சின்னைய்யன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் அவர்கள் முன்னிலையில் கொடுத்தேன் என்றும், அதன் பிறகும் புகார்தாரர் தன்னிடம் வட்டி பணம் கேட்டு தொந்தரவு செய்ததால் தான் கடந்த 01.07.2021 அன்று வலங்கைமான் காவல் நிலையத்தில் இது தொடர்பாக புகார் கொடுத்தேன் என்றும், தொடர்ந்து புகார்தாரர் தன்னை மேற்படி அசல் தொகை மற்றும் வட்டியை கேட்டு தொந்தரவு செய்ததால் தான் 431925 என்ற எண்ணுள்ள தனது SBI நீடாமங்களம் கிளை காசோலையை ரூ.3,65,000/–க்கு பூர்த்தி செய்து தான் புகார்தாரரிடமிருந்து பெற்ற அசலுக்கு கொடுத்தேன் என்றும், தான் 431926 என்ற எண்ணுள்ள எனது SBI நீடாமங்களம் கிளை காசோலையை ரூ.1,90,000/–க்கு பூர்த்தி செய்து தான் புகார்தாரரிடமிருந்து பெற்ற அசலுக்கான வட்டிக்கு கொடுத்தேன்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:33:31 +0530

என்றும், மேலும், மேற்படி காசோலைகளை தவிர்த்து 2 பூர்த்தி செய்யாத காசோலைகளையும் புகார்தாரர் மேற்படி பணத்தினை பெறும்போது தன்னிடமிருந்து பெற்றுக் கொண்டார் என்றும், மேற்படி காசோலைகளின் எண்கள் முறையே 431912 மற்றும் 257704 ஆகும் என்றும், மேலும் மேற்படி தொகைக்கு ஈடாக ஒரு கடனுறுதி பத்திரமும் மேலும் ஒரு வெற்று பத்திரமும் தன்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டு புகார்தாரர் தன்னிடமிருந்து வாங்கிகொண்டார் என்றும், கடந்த 2022 ம் வருடம் புகார்தாரர் தன்னிடமிருந்து மேற்படி தொகையான ரூ.3,65,000/- மற்றும் அதற்கு வட்டி தொகையான ரூ. 1,90,000/-க்கும் சேர்த்து ஒரே பத்திரமாக எழுதித் தரும்படி தன்னை வற்புறுத்தியதால் தான் அதற்கு சம்மதித்து ரூ.5,55,000/-க்கு முத்திரை வில்லை ஒட்டப்பட்ட பத்திரத்தில் அவரிடம் எழுதிக்கொடுத்தேன் என்றும், தான் பெற்ற கடன் தொகைக்கு 1 % வீதம் வட்டி தருவதாக புகார் தாரரிடம் வலங்கைமான் காவல் நிலையத்தில் வைத்து கூறினேன் என்றும், ஆனால் புகார்தாரர் அதற்கு சம்மதிக்கவில்லை என்றும், தான் இதுவரை புகார்தாரரிடம் தான் பெற்ற கடனுக்கு ரூ.4,80,500/- ஐ செலுத்தியுள்ளேன் என்றும், புகார்தாரரால் தன்மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு பொய் வழக்காகும் என்றும், தான் புகார்தாரரிடம் புகார்தாரர் சொல்லியுள்ள தேதியான 2022ம் வருடம் புகார்தாரரிடமிருந்து எந்த பணமும் பெறவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**9.** எதிரி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக எ.த.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள ஹானஸ்ட் ராஜ் என்பவர் தனது சாட்சியத்தில் தான் ஓட்டுநராக பணி செய்து வருகிறேன் என்றும், புகார்தாரர் மதன கோபாலை மற்றும் ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும், கடந்த 2019 ம் வருடம் 1 வது மாதம் புகார்தாரர் மதனகோபாலிடம் எதிரி சதீஷ்குமார் 3

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:33:39 +0530

லட்ச ரூபாய் பணம் வாங்கினார் என்றும், ஆலங்குடி கடைத்தெருவில் வைத்து சின்னையன், ரமேஷ் மற்றும் தன் முன்னிலையிலும் தான் மேற்படி பணத்தை புகார்தாரரிடமிருந்து எதிரி பெற்றுக்கொண்டார் என்றும், மேற்படி பணம் பெறும்போது எதிரி, காசோலைகள், ரூ.100 மதிப்புக்கான பத்திரம் 4 மற்றும் கடனுறுதி சீட்டினை புகார்தாரரிடம் கொடுத்தார் என்றும், அதில் சின்னையன் மற்றும் ரமேஷ் சாட்சிகளாக கையொப்பம் செய்தனர் என்றும், மேற்படி கடன் தொகையான 3 லட்சம் ரூபாய்க்கு மாதம் 5 காசு வட்டி கொடுக்க வேண்டும் என்று சம்மதித்ததன் பேரில் மாதமாதம் 3 லட்ச ரூபாய்க்கு ரூ. 15,000/– வட்டி வீதம் செலுத்தி வந்தார் என்றும், அதன்பின்பு மேற்படி தொகையான 3 லட்ச ரூபாயை பெற்றுக்கொண்டதிலிருந்து 2 மாதத்திற்கு பின்பு மீண்டும் புகார்தாரரிடம் எதிரி ரூ.65,000/– கடனாக பெற்றார் என்றும், மேற்படி தொகையான ரூ.65,000/–க்கும் 5 பைசா வட்டி என சம்மதித்து ரூ.3250/– வட்டி பெற்று வந்தார் என்றும், அதன்பின்பு மாதமாதம் ரூ.18.250/– வீதம் 10 மாதம் வட்டி செலுத்திவந்தார் என்றும், மேற்படி வட்டித்தொகையை புகார்தாரரிடம் கொடுக்கும்போது சின்னையன் மற்றும் ரமேஷ் ஆகியோருடன் ஒன்றாக செல்வேன் என்றும், அதன்பின்பு 6 மாதமாக வட்டி கொடுக்காததால் மேற்படி வட்டித்தொகைக்கும் அசலுக்கும் சேர்த்து ரூ.2,25,000/– மொத்தமாக ஆஜர் எதிரி புகார்தாரரிடம் கொடுத்தார் என்றும், அதன்பின்பு மாதாமாதம் ஆஜர் எதிரி புகார்தாரரிடம் வட்டி செலுத்தி வந்தார் என்றும் பின்பு சின்னையன் இறந்துவிட்டதால் புகார்தாரருக்கும் ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டு காசோலை மோசடி வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக நான் கேள்விப்பட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:34:03 +0530

**10.** இங்கு தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் வாதி தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் போதுமான மற்றும் தெளிவான சாட்சிகள் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

__தீர்வு:__

**11.** புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதுரையில், எதிரி புகார்தாரரிடம், அவரது குடும்ப அவசரத்தேவைக்காக பணம் தேவைப்படுவதாக சொல்லி, எதிரி புகார்தாரர் வீட்டிற்கு வந்து கடந்த 15.02.2022ம் தேதியன்று ரூ.3,65,000/- கடனாக பெற்றுக்கொண்டு, பு.சா.ஆ.1 காசோலையை கடன் தொகை ரூ.3,65,000க்கு பூர்த்தி செய்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி வழக்கு காசோலையை, எதிரி சொன்னதன் அடிப்படையில், புகார்தாரர் அவரது வங்கியில் வசூலுக்கு செலுத்தியபோது, காசோலையானது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என (Funds Insufficient) என திருப்பப்பட்டுவிட்டதாகவும், அதன்பின்பு புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பை, எதிரி பெற்றுக்கொண்டு பொய் சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றும், எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் எதிரி புகார்தாரரிடம் பெற்று கொண்ட தொகையான ரூ.3,65,000 ஒப்புக்கொண்டுள்ளதாகவும் மேற்படி தொகையை திருப்பி தர தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளதாகவும் ஆனால் இன்று வரை மேற்படி தொகையை திருப்பி தரவில்லை என்றும் ஆகவே புகார்தாரர் இந்த புகார் தாக்கல் செய்துள்ளதாகவும். புகார்தாரர் மாற்றுமுறையாவணச்சட்டப்பிரிவு 138 ன்கீழான உட்கூறுகளை சட்டப்படி நிரூபணம் செய்துள்ளதாகவும், மேலும் புகார்தாரருக்கு ஆதரவாகவும் எதிரிக்கு எதிராக மாற்றுமுறையாணச்சட்டம் பிரிவு 118 மற்றும் 139-ன் கீழ் அனுமானம்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:34:11 +0530

ஏற்பட்டுள்ளதாகவும், எதிரி புகார்தாரரின் வழக்கை உரிய ஆவணம் மற்றும் சாட்சியத்தின்மூலம் மறுக்கவில்லை என்றும், புகார்தாரர் தமது வழக்கை யாதொரு சந்தேகத்திற்கும் இடமில்லாமல் நிரூபணம் செய்துள்ளதாகவும். அதனால் எதிரியை தண்டித்து புகார்தாரருக்கு இழப்பீடு செலுத்த உத்தரவிடவேண்டுமென வாதிட்டார்.

**12.** எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதுரையில், கடந்த 15.02.2022ம் தேதி அன்று எதிரி குடும்ப நண்பர் என்ற முறையில் புகார்தாரரிடம் இருந்து குடும்ப செலவிற்காக ரூ.3,65,000/– ( ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)ஐ கடனாக பெற்றுள்ளதாக கூறுவதும், அதற்காக 31.03.2022 தேதியிட்ட பாரத ஸ்டேட் வங்கி காசோலை எண்.431925 எண்ணுள்ள காசோலையை கொடுத்ததாக கூறுவதும் முற்றிலும் பொய்யான ஒன்றாகும் என்றும், கடந்த 2019 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் தேதி எதிரி புகார்தாரரிடம் ரூ.3,00,000/–( மூன்று லட்சம் மட்டும் ) பெற்றுள்ளார் என்றும், மேலும் சில்லரையாக ரூ.65,000/– பெற்றுள்ளார் என்றும், அதற்கு மாதம் 100 க்கு 5 வட்டி வீதம் புகார்தாரர் எதிரியிடம் கேட்டு அதற்கு மாதம் ரூ.18,250/– வீதம் டிசம்பர் மாதம் வரை ரூ 2,19,000/– கொடுத்து வந்தார் என்றும், பின்பு 01.01.2020 முதல் 31.10.2020 வரை ரூ.2,25,000/– வட்டியாக பூந்தோட்டம் ரமேஷ், சின்னையன் முன்னிலையில் கொடுத்ததாகவும், பின்பு 2020ம் வருடத்திற்கான நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு டிசம்பர் மாத கடைசியில் ரூ. 31,500/– கொடுத்ததாகவும் வட்டி பாக்கித் தொகையான ரூ.5,000/– 2021 ம் வருடம் ஜனவரி மாதம் தருவதாக ஒப்புக்கொண்டு மேற்படி ரூபாய் 5,000/–தை கடந்த 12.05.2021 ம் தேதி கொடுத்ததாகவும், கடந்த 2021 ம் ஆண்டுக்கான வட்டி பாக்கித் தொகையை கேட்ட போது எதிரிக்கும் புகாதாரக்கும் வாய் தகராறு ஏற்பட்டு வலங்கைமான்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:34:18 +0530

காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகாரில் விசாரணை செய்த காவல் அதிகாரி பிரச்சினையை முடித்துக் கொள்ள அறிவுறுத்தி அனுப்பியதாகவும் உண்மையில் எதிரி கடந்த 31.03.2022 ம் தேதி ரூ.3,65,000/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) காசோலை எண்.431925 கொடுத்ததாகவும், மேலும் எதிரி புகார்தாரரிடமிருந்து பெறாத தொகையான 1,90,000 க்கு காசோலை எண். 431926 கொடுத்துள்ளதாகவும், மேலும், 04.04.2019 அன்று காசோலை எண். 431912 மற்றும் கடனுறுதி சீட்டு மற்றும் 100 ரூபாய் பத்திரம் ஆகியவற்றில் பூர்த்தி செய்யாமல் கையொப்பம் மற்றும் செய்து கொடுத்ததாகவும் எதிரி புகார் தாரரிடமிருந்து பெற்ற அசல் மற்றும் வட்டிக்காக இதுவரை ரூ.4,80,500/- கொடுத்துள்ளதாகவும், எனவே, எதிரி புகார்தாரரிடம் பணம் கொடுத்து ஏமாந்துள்ளநிலையில், எதிரியை பழிவாங்கும் நோக்கத்தோடு தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு மோசடியாக பெறப்பட்ட காசோலை மூலம் தாக்கல் செய்துள்ள வழக்கு என்பதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென எதிரி தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**13.** புகார்தாரர் தரப்பு வழக்கு யாதெனில் புகார்தாரரும் எதிரிகள் குடும்ப நண்பர்கள் ஆவார்கள் என்றும், புகார்தாரர் கடந்த 15.02.2022 ல் நேரில் அணுகி அவசர குடும்ப செலவிற்காக ரூ.3,65,000/- த்தை கடனுதவி கேட்டுள்ளார் என்றும், புகார்தாரர் அன்றைய தினமே எதிரியிடம் ரூ. 3,65,000 த்தை கடனாக கொடுத்துள்ளார் என்றும், மேலும் கடன்தொகையை ரூ.3,65,000/-த்தை புகார்தாரரிடமிருந்து எதிரி பெற்றுக்கொண்டு கடந்த 31.03.2022 ம் தேதியிட்டு எதிரி கணக்கு வைத்துள்ள நீடாமங்கலம் பாரத ஸ்டேட் வங்கி கிளையின் காசோலை எண். 431925 என்ற எண் கொண்டு காசோலையை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:34:25 +0530

ரூ.3,65,000/–க்கு தொகையை பூர்த்தி செய்து கையொப்பமிட்டு புகார்தாரரிடம் கொடுத்து 31.03.2022ம் தேதியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தால் தொகை ரூ.3,65,000/–த்தை புகார்தாரர் பெற்றுக்கொள்ளலாம் என்று நம்பிக்கையுடன் கூறியுள்ளார் என்றும், புகார்தாரர் கடந்த 31.03.2022 அன்று புகார்தாரர் கணக்கு வைத்துள்ள பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளையில் வசூலுக்காக சமர்பித்துள்ளார் என்றும், மேற்படி காசோலையை பெற்ற பாரத ஸ்டேட் வங்கி, வலங்கைமான் கிளையில் காசோலைக்கு போதிய பணமில்லை (Funds Insufficient) என்று தெரிவித்து திருப்புதல் குறிப்பணை கடந்த 31.03.2022ல் புகார்தாரருக்கு வழங்கியுள்ளது என்றும், எதிரி அவரது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று நன்கு அறிந்திருந்தும் புகார்தாரருக்கு காசோலை வழங்கி அவற்றை வங்கி மூலம் வசூலுக்கு சமர்பித்து பணம் பெற்றுக்கொள்ளுமாறு கூறி அதன் மூலம் புகார்தாரரை நம்ப வைத்து ஏமாற்றி மோசடி செய்யும் நோக்கத்தோடு எதிரி செயல்பட்டுள்ளார் என்றும், எதிரி கொடுத்த காசோலை பணமாகாமல் போதிய பணமில்லை என்று திருப்பபட்ட விபரம் தெரிவித்து தன்னுடைய வழக்கறிஞர் மூலம் கடந்த 13.04.2022 அன்று அறிவிப்பு எதிரிக்கு அனுப்பியுள்ளார் என்றும், அந்த அறிவிப்பில் மேற்படி காசோலையில் கண்ட கடன் தொகையை அறிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் திரும்ப செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்ற அவகாசம் நிறைவடைந்து வழக்கு மூலம் தொடங்கிவிட்டது என்றும், உரிய காலக்கெடுவிற்குள் இம்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி தன் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை அறிந்து புகார்தாரருக்கு காசோலையை வழங்கி புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்துள்ளார் என்றும், எதிரி செய்த மோசடி

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:34:32 +0530

செயலுக்காக தகுந்த தண்டனை வழங்கும்படியும், குவிமுச பிரிவு 357 ன் படி காசோலைக்குரிய தொகையை எதிரி தனக்கு வழங்கிட வேண்டும் என்பதே ஆகும்.

**14.** புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் எதிரிதரப்பு சாட்சியம் மற்றும் இருதரப்பு சான்றாவணங்கள் இந்நீதிமன்றம் கூர்ந்து ஆராய்கையில், புகார்தாரரின் புகாரில் முதல்நிலை வழக்கு உள்ளதாக நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார். அவ்வாறு புகார்தாரர் முதல்நிலை வழக்கை நிரூபணம் செய்து புகார்தாரருக்கு ஆதரவாக வழக்கு உள்ள நிலையில் அனுமானம் எதிரிக்கு மாற்றப்படும். எதிரி அனுமானத்தை மறுத்து நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக தோற்றம் செய்யும் நிலையில், எதிரிக்கு ஆதரவாக அனுமானம் ஏற்பட்டு, திரும்ப புகார்தாரர் வழக்கை நிரூபணம் செய்ய வேண்டும் (Reverse Onus). புகார்தாரர் தனது வழக்கை எதிரிக்கு எதிரான குற்றப்பொறுப்பை, நியாயமான ஐயத்திற்கு இடமில்லாமல் முழுமையாக நிரூபணம் செய்ய வேண்டும். ஆனால் எதிரி புகார்தாரர் வழக்கை முழுவதுமாக மறுத்து நிரூபணம் செய்யத்தேவையில்லை. எதிரி புகாரில் நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக (Probable defence) தோற்றத்தை ஏற்படுத்தி முதல்நிலை வழக்கை மறுத்தாலே போதுமானது ஆகும்.

**15.** எதிரியால் புகார்தாரருக்கு கடந்த 31.03.2022ம் தேதி வழங்கிய பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளையின் காசோலையின் அசல் **பு.சா.ஆ.1** ஆகவும், கடந்த 31.03.2022ம் தேதி பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளையில் எதிரி கணக்கில் போதிய தொகை இல்லை என்று வழங்கிய Return Memo அசல் **பு.சா.ஆ.2** ஆகவும், மனுதாரர் எதிரிக்கு வழக்கறிஞர் மூலமாக கொடுத்த 13.04.2022 ம் தேதியிட்ட

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:34:39 +0530

அறிவிப்பின் அலுவலக நகல் **பு.சா.ஆ.3** ஆகவும், கடந்த 30.04.2022 ம் தேதி எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் பு.சா.ஆ.4 ஆகவும், புகார்தாரரின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஆதார் அட்டையின் நகல் **பு.சா.ஆ.5** ஆகவும், அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி கடந்த 26.04.2022 ம் தேதியிட்டு கொடுத்த பதிலறிவிப்பின் அசல் **பு.சா.ஆ.6** ஆகவும், எதிரியின் வங்கி கணக்கு பரிவர்த்தனை 2019 லிருந்து 2023 ம் ஆண்டுவரைக்கான பதிவேட்டின் கணிணி நகலை **பு.சா.ஆ.7** ஆகவும், எதிரியின் வங்கி கணக்கின் வழக்கு காசோலை தாக்கல் செய்யப்பட்டதற்கான கணினி நகல் **பு.சா.ஆ.8** ஆகவும் புகார்தாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மூலம் முதல் நோக்கு வழக்கிற்கு தேவையான சங்கதிகள் இருப்பதாக அறிய முடிகிறது.

**16.** பொதுவாக மாற்று முறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 118(அ) ஆகியவற்றின் மீதான சட்ட அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக உள்ளது. 118(அ)–ன் படி மறுத்து கூறும் சங்கதிகளை நிரூபித்தலின்றி (Until the contrary Is proved) கொடுக்கப்பட்ட ஆவணம் மறுபயனிப்பதற்காக வழங்கப்பட்டதகாவே கருத வேண்டும் என்று விளம்புகிறது. பிரிவு 139 மாற்றுமுறை ஆவணத்தை வைத்திருப்பவரிடம் அதை கொடுத்தவர் கடனுக்காக கொடுத்ததாகவே அனுமானிக்க வேண்டும் என்று கூறுகிறது. எனவே 118(அ) மற்றும் 139 ஆகியவற்றில் கூறியுள்ளவாறு எதிரி தனது தரப்பிலான வாதத்தை நிரூபிக்காத வரை காசோலை கடனுக்காக தான் வழங்கியதாக அனுமானிக்க வேண்டும் என்று பிரிவு 138 ல் கூறப்பட்டுள்ளது.

**17.** இவ்வழக்கில், எதிரி தரப்பில் எ.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:34:46 +0530

எதிரி தனது முதல் விசாரணையில், “தொடர்ந்து புகார்தாரர் என்னை மேற்படி அசல் தொகை மற்றும் வட்டியை கேட்டு தொந்தரவு செய்ததால். நான் 431925 என்ற எண்ணுள்ள எனது SBI நீடாமங்களம் கிளை காசோலையை ரூ3,65,000/−க்கு பூர்த்தி செய்து நான் புகார்தாரரிடமிருந்து பெற்ற அசலுக்கு கொடுத்தேன்” என்று சாட்சியம்மளித்துள்ளார். மாண்பமை உச்ச நீதிமன்றம் Hiten P Dalal vs. Bratindranath Banerjee, AIR 2001 SC 3897 என்ற வழக்கில் “..The presumption U/S.139 of the Act is a presumption of law, it is not a presumption of fact. This presumption has to be raised by the Court in all the cases once the factum of dishonour is established. The onus of proof to rebut this presumption lies on the accused. The standard of such rebuttal evidence depends on the facts and circumstances of each of case. Such evidence must be sufficient, cogent and should prove beyond any reasonable doubt. Therefore, a mere explanation is not enough to repel this presumption of law” என்று கூறியுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது,

மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம், P. RASIYA vs ABDUL NAZEWR AND ANR, Appeal No. 1233 -1235 of 2022 Dated 12.08.2022 என்ற வழக்கில்...,

"Once the initial burden is discharged by the complainant that the cheque was issued by the accused and the signature and the issuance of the cheque is not disputed by the accused, in that case, the onus will shift upon the accused to prove the contrary that the cheque was not for any debt or other liability. The presumption under section 139 of the N.I. Act is a statutory presumption and thereafter, once it is presumed that the cheque is issued in whole or in part of any debt or other liability which is in favour of the complainant/holder of the cheque, in that case, it is for the accused to prove the contrary" என்று கூறியுள்ளது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:34:52 +0530

**18.** இவ்வழக்கில் எதிரி வழக்கு காசோலையை தன்னுடையது அல்ல என்றோ அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றோ மறுக்காத நிலையில் மேற்படி காசோலை சட்டப்படி கொடுக்க வேண்டிய கடனுக்காக கொடுக்கபட்டது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்புரையின்படி புகார்தாரர் மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138(a),(b)&(c)–ன்கீழான அனைத்து நிபந்தனைகளையும் இந்நீதிமன்றத்தில் பூர்த்தி செய்துள்ளார். எனினும் எதிரி இந்த வழக்கில் எழும் முரண்பாட்டை நிரூபிக்கும் வகையில், மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 118 மற்றும் 139 ன்கீழ் சட்டப்படியான கடன்பொறுப்பை தீர்ப்பதற்காக இந்த வழக்கு காசோலை புகார்தாரருக்கு வழங்கவில்லை என எதிரி மறுதலித்திருக்க வேண்டும் ஆனால் அவ்வாறு மறுதலிக்காமல் மேற்படி வழக்கு காசோலையானது அசல் மற்றும் வட்டியை கேட்டு புகார்தாரர் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்ததால் கொடுத்தேன் என்று தனது நீதிமன்ற சாட்சியத்தில் கூறியுள்ளார். எனவே புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சியத்தின்படி புகார்தாரர் இவ்வழக்கை மாற்றுமுறையாவணச் சட்டத்தின்படி முதல்நிலை வழக்கு உள்ளதாக நிரூபணம் செய்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது.

**19.** எதிரி புகார்தாரரிடம் பணம் ரூ.3,65,000/– கடனாக ரொக்கம் பெற்றுக்கொண்டு, அதனை திருப்பிச்செலுத்துவதற்காக **பு.சா.ஆ.1** காசோலை கொடுத்ததாகவும், காசோலையை வங்கியில் வசூலுக்கு செலுத்தி பணம் பெற்றுக்கொள்ள சொன்னதன் அடிப்படையில், புகார்தாரர், எதிரியின் காசோலையை வங்கியில் வசூலுக்கு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:34:58 +0530

செலுத்தியுள்ளார். ஆனால், எதிரியின் காசோலையானது எதிரி வங்கி கணக்கில் போதிய பணமில்லை என திருப்பப்பட்டுள்ளது.

**20.** எதிரி தரப்பு வாதம் என்பது, தான் பல்வேறு தினங்களில் புகார்தாரரிடம் தான் கடனாக பெற்ற தொகையான ரூ.3,65,000/-தை புகார்தாரரிடம் வட்டியும் அசலுமாக சாட்சிகள் ரமேஷ், சின்னையன் மற்றும் ஹானஸ்ட்ராஜ் முன்னிலையில் கொடுத்துவிட்டார் என்பதே ஆகும். மேற்படி கூற்றை நிரூபிப்பதற்காக ஹானஸ்ட்ராஜ் என்பவரை எ.த.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். எ.த.சா.3 தனது சாட்சியத்தில் எதிரி புகார்தாரரிடம் பல்வேறு சந்திரபங்களில் பணம் கொடுத்ததாக கூறியுள்ள போதிலும் அதனை நிரூபிக்கும் விதமாக எவ்வித சான்றாவணங்களும் எதிரி தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் எதிரி புகார்தாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் எ.த.சா.3 ஹானஸ்ட்ராஜ், எதிரி புகார்தாரரிடம் அவர் பெற்றிருந்த கடன்தொகைக்கு வட்டியும் முதலும் கொடுக்கும் போது உடன் இருந்தார் என்று கூறவில்லை. எனவே எ.த.சா.3 முன்னிலையில் எதிரி கொடுத்ததாக சொல்லும் தொகை கொடுக்கப்பட்டதா என்பதே சந்தேகத்திற்குறியதாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**21.** எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள வாதம் என்பது, புகார்தாரரிடமிருந்து எதிரி கடனாக ரூ.3,65,000/-த்தை பெற்று அதன் பிறகு பல சந்தர்பங்களில் மேற்படி கடனாக பெற்ற தொகைக்கு வட்டியும் முதலுமாக ரூ.4,80,500/- புகர்தாரரிடம் எதிரியால் கொடுக்கப்பட்டுவிட்டது என்பதே ஆகும். மேற்படி எதிரி தரப்பு வாதத்தை பரிசீலிக்கையில், மேற்படி கடன் தொகையை எதிரி திருப்பிக்கொடுத்துவிட்டதாகவோ, அந்த காசோலைகளை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:35:05 +0530

திரும்பபெறுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தோ எதிரி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எதிரி அவருக்கு சொந்தமான இவ்வழக்கு காசோலையை புகார்தாரரிடம் கொடுக்கப்பட்டதாக கூறும் நிலையில், புகார்தாரர் மேற்படி காசோலைக்கான தொகையை கொடுத்துவிட்டதை எதிரி தான் நிரூபணம் செய்ய வேண்டும். மேலும், புகார்தாரரிடம் பணம் பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக காசோலை கொடுக்கவில்லை என்பதை மறுக்கும்விதமாக உரிய சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்திருக்கவேண்டும். ஆனால் எதிரி தரப்பில் கடன் தொகையான ரூ. 3,65,000/-ஐ புகார்தாரரிடம் கொடுத்ததற்கு ஆவணங்கள் எதுவும் இந்நீதிமனறத்தில் தாக்கல்செய்யப்படவில்லை. மாறாக எதிரி புகார்தாரருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் அவர் பெற்ற கடன் தொகையை மூன்று மாத காலத்திற்குள் திருப்பி தர தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

**22.** இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள **பு.சா.ஆ.1** (Ex.P.1) காசோலையானது எதிரியின் காசோலை என்பதும், காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே **பு.சா.ஆ.1** (Ex.P 1) காசோலையானது எதிரியால் புகார்தாரரிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையான ரூ-3,65,000/-க்கு கொடுக்கப்பட்ட காசோலை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்து புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானிக்கிறது.

**23.** மேற்கண்ட முன்தீர்ப்புரையின்படி மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 139 ன் கீழான அனுமானத்தை எதிரி மறுக்கலாம். புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையிலான

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:35:12 +0530

பணபரிவர்த்தனைகள் சட்டப்படியான கடனை தீர்க்கும் பொருட்டு காசோலை வழங்கவில்லை என்று எதிரி நிரூபணம் செய்யும் பட்சத்தில் மட்டுமே அதில் ஏதேனும் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் புகார்தாரரின் புகார் நிலைக்கத்தக்கதல்ல. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் எதிரி புகார்தாரரின் புகாரை மறுக்க இயலும். எதிரி இவ்வழக்கு காசோலை தன்னுடையது என்றும், காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று மறுக்கவில்லை. இவ்வழக்கு காசோலையான பு.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கும்போது காசோலையில் யாதொரு அடித்தல், திருத்தம் ஏதும் இல்லை. புகார்தாரர் இவ்வழக்கை உரிய சாட்சியம் மற்றும் சான்றாணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ளார். எதிரி, புகார்தாரரின் புகாரை மறுத்தலிக்கும் விதமாக யாதொரு சாட்சியமோ, ஆவணங்களோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரரிடம் எதிரி ரூ.3,65,000/-த்தை கடனாக பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக **பு.சா.ஆ.1** காசோலையை கொடுத்துள்ளார். **பு.சா.ஆ.1** காசோலை என்பது எதிரியின் காசோலை என்பதும், எதிரியின் காசோலை கடந்த 31.03.2022 ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டபோது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டுள்ளது. அதனால் புகார்தாரருக்கு எதிரி அவரது சட்டப்படியான கடனை தீர்க்கும்பொருட்டே காசோலை கொடுத்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் புகார்தாரரின் புகாரை எதிரி உரிய முறையில் மறுத்தளிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:35:17 +0530

**24.** எதிரி இவ்வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல, காசோலை தன்னுடையது அல்ல என்று மறுக்காத நிலையில், மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138 ன்படி எதிரியை சட்டப்படியான கடன் பொறுப்பிலிருந்து விடுவிக்க இயலாது. எதிரி சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காகத்தான் **பு.சா.ஆ.1** (Ex.P.1) காசோலை கொடுக்கப்பட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எதிரி அவரது தனிப்பட்ட தரப்பை ஆவண சாட்சியங்கள் வாயிலாக போதுமான அளவு புகார்தாரரின் புகாரை மறுத்து அதை நிரூபிக்கவில்லை. மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 139–ன்படியான அனுமானம் மறுதளிக்கக்கூடிய அனுமானமே என்றாலும், எதிரி தரப்பில் அவ்வாறு மறுதளிக்க இயலாத நிலையில், அந்த அனுமானமே இறுதியான அனுமானம் ஆகும். ஆகவே எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தகுதி நிலை ஐயப்பாட்டிற்கிடமில்லாமல் நிரூபணம் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**25.** இந்நீதிமன்றம் மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138 ன்கீழ் குற்றச்செயல் புரிந்தவருக்கு 2ஆண்டுகள்வரை சிறைத்தண்டனையும், 2 மடங்கு காசோலைத்தொகை அபராதமாகவோ அல்லது இரண்டும் சேர்த்து செலுத்தவேண்டுமென உத்தரவிட இயலும். இவ்வழக்கின் எதிரி புகார்தாரரிடம் கடந்த 06.10.2018 ம் தேதியன்று ரூ.3,65,000/– (ரூபாய் மூன்று இலட்சத்தி அறுபத்தி ஐந்து ஆயிரம் மட்டும்) கடன் தொகையை ரொக்கமாக கடனாக பெற்றுக்கொண்டுள்ளார். அதற்கு கொடுக்கப்பட்ட இவ்வழக்கு காசோலைகள் மதிப்பளிக்கப்படாமல் காசோலை திரும்பி வந்ததால் இவ்வழக்கு கடந்த 2022 ம் ஆண்டு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:35:24 +0530

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் தன்மை கருதி குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 357(3) இழப்பீடாக காசோலைத்தொகை ரூ.3,65,000/- எதிரி செலுத்தினால் போதுமானதென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி இழப்பீட்டு தொகை நீதிமன்றம் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் எதிரி செலுத்த தவறும் பட்சத்தில் சிறைத்தண்டனை விதிக்க இயலும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் முன்தீர்ப்புரை வழங்கியுள்ளது. *(2009) 6 SCC 652, Vijayan VS Sadanandan.K* என்ற வழக்கில

> *The provisions of Sections 357(3) and 431 Cr.P.C., when read with Section 64 IPC, empower the Court, while making an order for payment of compensation, to also include a default sentence in case of non-payment of the same. The observations made by this Court in Hari Singh's case ((1998) 4 SCC 551 are as important today as they were when they were made and if, as submitted by Dr. Pillay, recourse can only be had to Section 421 Cr.P.C. for enforcing the same, the very object of Sub-Section (3) of Section 357 would be frustrated and the relief contemplated therein would be rendered somewhat illusory.*
>
> *Having regard to the views expressed herein above, we hold that while awarding compensation under Section 357(3) Cr.P.C., the Court is within its jurisdiction to add a default sentence of imprisonment as was held in Hari Singh's case (1998) 4 SCC 551.*
>
> மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்புரையின்படி மேற்படி எதிரி இழப்பீடு செலுத்த தவறும்பட்சத்தில் உரிய சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டுமென்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**26.** சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்தாராந்ததில் புகார்தாரர் வழக்கு நிரூபிக்கப்பட்ட நிலையில், பு.சா.1 வழக்கு காசோலை சட்டப்படியான கடனுக்கு தான்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:35:30 +0530

கொடுக்கப்பட்டது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எதிரியின் சாட்சிகளும், ஆவணங்களும் எதிரிக்கு ஆதரவாக இல்லை என்பதாலும், புகார்தாரர் தமது வழக்கை நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**27.** முடிவாக, மாற்று முறையாவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் எதிரி குற்றம்புரிந்துள்ளதாக முடிவுசெய்து பிரிவு 278(2)BNSS –ன் கீழ் எதிரிக்கு 6 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், பிரிவு 395(3) BNSS–ன் கீழ் இழப்பீடாக ரூ.3,65,000/–(மூன்று இலச்சத்தி அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)–ஐ புகார்தாரருக்கு தீர்ப்புத்தேதியா இன்றிலிருந்து(16.04.2026) இரண்டு மாத காலத்தில் செலுத்தி வைக்கவேண்டுமென்றும், இழப்பீடு தொகையை செலுத்த தவறும்பட்சத்தில் மேலும் 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டணையும் தண்டணையாக அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி தண்டணையை ஒன்றன் பின் ஒன்றாக(consecutive) ஆக அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்த பின்பு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.16 18:35:38 +0530

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:35:44 +0530

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் வலங்கைமான்

**புகார்தாரர்/மனுதாரர் தரப்பு சாட்சி:**

| | |
|---|---|
| பு.சா.1 | மதனகோபால் |

**புகார்தாரர் தரப்பு சாண்றவணங்கள்:**

| வ.எண் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1) | 31.03.2022 | பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளையின் காசோலை | அசல் |
| 2) | 31.03.2022 | பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளை வழங்கிய Return Memo | அசல் |
| 3) | 13.04.2022 | வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் | அசல் |
| 4) | 30.04.2022 | எதிரி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்காக அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| 5) | 09.10.2023 | புகார்தாரரின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஆதார் அட்டை | நகல் |
| 6) | 26.04.200 | அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி கொடுத்த பதிலறிவிப்பு | அசல் |
| 7) | 25.09.2025 | எதிரியின் வங்கி கணக்கு பரிவர்த்தனை 2019 லிருந்து 2023ம் ஆண்டுவரைக்கான பதிவேட்டின் | கணினி நகல் |

| | | | |
|---|---|---|---|
| 8) | 03.10.2025 | எதிரியின் வங்கி கணக்கின் வழக்கு காசோலை | கணினி நகல் |

<u>எதிர் மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>: –

| | |
|---|---|
| 1) | வெங்கடேஷ் |
| 2) | சதீஷ்குமார் |
| 3) | ஹானஸ்ட்ராஜ் |

<u>எதிரி மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>: –இல்லை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.16 18:35:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்

வலங்கைமான்

<u>குறிப்பு</u> :

1. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரி இவ்வழக்கில் பிணையில் இருந்தார்.

3. தீர்ப்பின் நகல் குற்றவாளிக்கு இலவசமாக வழங்கப்பட்டது,